# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.15 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | கமலக்கண்ணன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 1st day of November 2019.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் சென்னை வட்டார போக்குவரத்து மைய அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணி புரிந்து வந்தேன். 30.11.2010 ஆம் தேதி அன்று சிங்காநல்லூர் காவல் ஆய்வாளர் TN.01 T 8875 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் உரிமையாளர் விவரம் கோரினார். மேற்படி விவரத்தை அளிக்குமாறு வேண்டுகோள் கடிதத்துடன் கேட்டிருந்தார். அந்தக் கடிதத்தின் பின்புறத்தில் ஆய்வாளர் கேட்டிருந்த வாகனத்தைப் பற்றிய விவரத்தை அளித்துள்ளோம். எங்கள் அலுவலகத்தில் பராமரித்து வரப்படும் "ஆ" பதிவேட்டின்படி பார்வையிட்டதன்படி முதல் உரிமையாளர் Leelathar Rungtu, த/பெ Govindram Runtu கீழ்ப்பாக்கம் சென்னை -10 என்றும், அதன் கடைசி உரிமையாளர் வெங்கிடசுப்பிரமணியன், எண் 86/2 சுப்பிரமணி தெரு, சேலம் என்பவர் 8.9.2008 தேதியிலிருந்து உரிமையாளராக இருந்து வருகிறார் என்று அறிக்கை வழங்கினேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.த.ச.ஆ.7 ஆகும். அ.த.சா.ஆ.7 ஆவணத்தின் பின்புறத்தில் நான் வழங்கிய அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகும். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

எதிரி முன்னிலை, எதிரி தரப்பு வழக்குரைஞரும், முன்னிலை. குறுக்கு விசாரணை இல்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒம்/கமலக்கண்ணன்